**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 157 /2019 PW . 1**

| | |
|---|---|
| **பெயர் : செல்வசேகரன்** | **தந்தை/கணவர் பெயர்: தியாகராஜன்** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

---

**(1 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**<u>09.10.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மட்டிக்கரைப்பட்டி கிராமத்தில் வசிக்கிறேன். திருப்பூர் பேக்கரியில் மாஸ்டராக வேலை செய்கிறேன். வழக்கின் புகார்தாரர் வைரவன் எனது சித்தப்பா மகன் ஆவார். அவர் தற்போது சிங்கப்பூரில் பணிபுரிந்து அங்கு வசித்து வருகிறார். சாட்சி அருள் என்பவர் சித்தப்பா மகன் ஆவார். அவர் தற்போது அந்தமானில் பணிபுரிந்து அங்கு வசித்து வருகிறார். எதிரிகளை தெரியும். அவர்கள் பக்கத்து ஊர்க்காரர்கள். 02.06.2015ம் தேதி சிங்கம்புணரியில் சேவுகமூர்த்தி அய்யனார் கோவிலில் பூப்பல்லாக்கு திருவிழா நடந்தது. அதற்காக எங்கள் ஊரில் இருந்து நான், வைரவன், அருள் மற்றும் எங்கள் ஊர்க்காரர்கள் வந்திருந்தோம். திருவிழாவிற்கு வந்துவிட்டு மீண்டும் ஊருக்கு செல்லும்போது சுமார் 10 மணியளவில் சிவபுரிப்பட்டி சிவன்கோவில் அருகே சென்ற போது எதிரிகள் உட்பட 10 பேர் சேர்ந்து எங்களை அடித்தார்கள். எதிரிகள் மது குடித்துவிட்டு எங்களிடம் வம்பு செய்து சண்டை போட்டார்கள். இருட்டாக இருந்ததால் யார் என்னை அடித்தார்கள் என்று பார்க்கமுடியவில்லை. ஆனால் எல்லோரும் சேர்ந்து கம்பால் அடித்தார்கள். கோத்தா, கொம்மா என்று எதிரிகள் கெட்டவார்த்தையால் பேசினார்கள். அதில் எனக்கு இடது கையிலும், இடது பக்க கழுத்து பகுதியிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது.

2. புகார்தாரர் வைரவனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. சாட்சி அருளுக்கு காலில் காயம் ஏற்பட்டது. என் உடன்பிறந்த அண்ணன் சாட்சி சந்திரசேகர் என்பவருக்கு உடலில் பல இடங்களிலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. சாட்சி பாண்டியனுக்கு என்ன காயம் ஏற்பட்டது என்று தெரியவில்லை. அதன்பிறகு சிங்கம்புணரி காவல்நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தோம். நான் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சென்று 2 நாட்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3. 1வது எதிரி சிவா புகார்தாரர் வைரவன் அடித்தார் என்றால் சரிதான். 1வது எதிரியுடன் சேர்ந்து 2வது எதிரி அடித்தார் என்றால் சரிதான். என்னை 4வது எதிரி ரகுபதி கட்டையால் அடித்து காயம்ஏற்படுத்தினார் என்றால் சரிதான். சாட்சி அருள் என்பவரை 3வது எதிரி மார்த்தண்டன் அடித்து காயம்ஏற்படுத்தினார் என்றால்சரிதான். நான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்தபோது மேற்சொன்ன விபரங்களை சொன்னேன் என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

4. சிங்கம்புணரி அரசு மருத்துவமனையில் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். கூட்டமாக 10 பேர் இருந்தார்கள். மேற்படி 10 நபர்களை எனக்கு தெரியும். அவர்களது பெயர் விபரங்களும் தெரியும். எனது ஊருக்கும் எதிரிகளின் ஊருக்கும் அரை கி.மீ தூரம் என்றால் சரிதான். புகாரில் கூட்டமாக 10 பேர் இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. புகார்தாரர் எனது சித்தப்பா மகன், அண்ணன் ஆவார். புகார்தாரர் எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. எதிரிகளுக்கும் எங்களுக்கும் அடிக்கடி பிரச்சனை நடக்கும் என்றால் சரிதான். எதிரிகளின் ஊர் வழியாக எங்கள் ஊருக்கு செல்லமுடியும் என்றால்சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் என்னை யாரும் அடிக்கவில்லை என்றாலும் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 157 /2019 PW . 2**

**பெயர் : சந்திரசேகர்** **தந்தை/கணவர் பெயர்: தியாகராஜன்**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

---

**(1 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**09.10.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது மட்டிக்கரைப்பட்டி கிராமத்தில் வசிக்கிறேன். பெயிண்ட்ராக வேலை செய்கிறேன். வழக்கின் புகார்தாரர் வைரவன் எனது சித்தப்பா மகன் ஆவார். அவர் தற்போது சிங்கப்பூரில் பணிபுரிந்து அங்கு வசித்து வருகிறார். சாட்சி அருள் என்பவர் சித்தப்பா மகன் ஆவார். அவர் தற்போது அந்தமானில் பணிபுரிந்து அங்கு வசித்து வருகிறார். அ.சா.1 எனது தம்பி. எதிரிகளை தெரியும். அவர்கள் பக்கத்து ஊர்க்காரர்கள். 02.06.2015ம் தேதி பூப்பல்லாக்கு திருவிழாவுக்கு சென்றுவிட்டு குடும்பத்துடன் ஊருக்கு சென்று கொண்டிருந்தபோது சிவபுரிபட்டி சிவன் கோவில் அருகே எதிரிகள் மற்றும் 2, 3 பேர் சேர்ந்து எதிரிகள் எங்களை தகாதவார்த்தையால் பேசி சத்தம்போட்டார்கள். அப்போது இரவு 10.30-10.45 மணி இருக்கும். மேலும் எங்களை அடித்தார்கள். 4, 5 எதிரிகள் என்னை பிடித்துக்கொண்டு 2வது எதிரி என்னை கையால் அடித்தார். எனக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. புகார்தாரர் வைரவனை 2வது எதிரி கட்டையால் அடித்தார். எனது அண்ணன் பாண்டியன் என்ற மருதுபாண்டியனை எதிரிகள் அடித்தார்கள். யார் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு தெரியவில்லை. பக்கத்தில் இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். எதிரிகள் என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று அச்சுறுத்தினார்கள்.

2. எதிரிகள் நாங்கள் ஊருக்குசென்றுகொண்டிருக்கும்போது அசிங்கமாக பேசி சத்தம்போட்டதால் நாங்கள் குடும்பத்துடன் வந்துகொண்டிருந்ததால் அசிங்கமாக பேசவேண்டாம் என்று சொன்னேன். அதற்காக அடித்தார்கள். பின்னர் நான், வைரவன், பாண்டியன் ஆகியோர் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். வைரவன் மற்றும் பாண்டியன் ஆகியோருக்கு தலையில் அடிப்பட்டதால் மதுரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நான் 2, 3 நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

3. கூட்டத்தில் எதிரிகளுடன் 4, 5 நபர்கள் இருந்தார்கள். வைரவன் எனக்கு சித்தப்பா மகன். அ.சா.1 எனது தம்பி. அருள் எனது சித்தப்பா மகன். பாண்டியன் எனது அண்ணன். போலீசார் அன்றைய

தினம் இரவே அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அப்போது என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் சொன்னேன். போலீசார் அதனை எழுதிக்கொண்டார்கள். நான் சொல்வது போல் சம்பவமே நடக்கவில்லை என்றாலும் எதிரிகள் அடித்ததால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளின் ஊர் வழியாக எங்கள் ஊருக்கு செல்லமுடியும் என்றால் சரிதான். அப்போது எதிரிகளுக்கும் எங்களுக்கும் வாய்தகராறு ஏற்படும் என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது இருந்த விரோதத்தால் புகார்தாரர் எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 157 /2019 PW . 3**

| | |
|---|---|
| **பெயர் : பாண்டியன்** | **தந்தை/கணவர் பெயர்: தியாகராஜன்** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

---

**(1 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**09.10.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது மட்டிக்கரைப்பட்டி கிராமத்தில் வசிக்கிறேன். பெயிண்ட்ராக வேலை செய்கிறேன். வழக்கின் புகார்தாரர் வைரவன் எனது சித்தப்பா மகன் ஆவார். அவர் தற்போது சிங்கப்பூரில் பணிபுரிந்து அங்கு வசித்து வருகிறார். சாட்சி அருள் என்பவர் சித்தப்பா மகன் ஆவார். அவர் தற்போது அந்தமானில் பணிபுரிந்து அங்கு வசித்து வருகிறார். அ.சா.1, 2 எனது தம்பி. எதிரிகளை தெரியும். அவர்கள் பக்கத்து ஊர்க்காரர்கள். சேவுகமூர்த்தி கோவில் திருவிழா பூப்பல்லாக்கு நிகழ்ச்சிக்கு 02.06.2015ம் தேதி எங்கள் குடும்பத்தினரை திருவிழாவில் விட்டுவிட்டு எனது அம்மாவை கூப்பிடுவதற்காக ஊருக்கு சென்றபோது சிவபுரிப்பட்டி சிவன் கோவில் அருகே 5, 6 பேர் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். இருட்டாக இருந்தது. புகார்தாரர் வைரவனை கட்டையால் அடித்தார்கள். நான், எனது தம்பி அ.சா.2 ஆகியோர் சண்டையை தடுத்தபோது என்னை 3வது எதிரி உருட்டுகட்டையால் அடித்ததில் எனக்கு நெற்றியிலும், பின்னந்தலையிலும் காயம் ஏற்பட்டது. (சாட்சி உருட்டுக்கட்டையை பார்த்தால் அடையாளம் காட்டமுடியும் என்று கூறுகிறார்.

**(திருப்பத்தூர் நீதிமன்றத்தில் இருந்த படிவம் 95 மற்றும் சான்றுபொருட்கள் பெறப்படவில்லை என்பதால் மு.வி. ஒத்திவைக்கப்படுகிறது)**